

திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மத்திய மற்றும் வடக்கு மாவட்டத்தின் சார்பாக நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் உரையாற்றியதோடு கழக நிர்வாகிகளிடம் புதிய உறுப்பினர் சேர்க்கை படிவங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.க்கள் காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார், கதிரவன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மு.அன்பழகன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அன்பில் பெரியசாமி, பரணி குமார், அவைத்தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம் அம்பிகாவதி, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட துணை செயலாளர் முத்துச்செல்வம், விஜயா ஜெயராஜ் கருணாநிதி, மயில்வாகனன் மற்றும் டோல்கேட் சுப்பிரமணி காஜாமலை, விஜய், தொ.மு.ச. நிர்வாகி குணசேகர், செவந்த லிங்கம், கண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள் கமால் முஸ்தபா, மோகன் தாஸ் நாகராஜ், இளங்கோ கலைச்செல்வி, ராமதாஸ் புஷ்பராஜ், கனகராஜ், கவிதா, அக்பர், ராஜேந்திரன், கருத்து கதிரேசன் உட்பட ஒன்றிய செயலாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (19.06.2025) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வருகின்ற 07.07.2025 அன்று திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற உள்ளதை முன்னிட்டு, திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகள், யாகசாலை அமைக்கும் பணிகள், திருக்கோயிலின் மேல்தளத்தின் உறுதித்தன்மை, குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்களுக்கான தேவையான அடிப்படை வசதிகள். பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் எம். அன்புமணி, எஸ். ஞானசேகரன். திருக்கோயில் தக்கார் ஆர். அருள் முருகன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## கரும்பு விவசாயிகளுக்கு

# சிறப்பு ஊக்கத் தொகையை விரைந்து வழங்க நடவடிக்கை எடுப்பீர்!

## ஆய்வுக் கூட்டத்தில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 21-

சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் தலைமையில் 19.6.2025 அன்று நடைபெற்ற கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் தொடர்பான செய்தி குறிப்பு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சுற்றுலாத்துறை மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடியை அதிகரித்தல், சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை உயர்த்துதல், கரும்பு விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகையை விரைந்து வழங்குதல் மற்றும் அமைச்சரின் அறிவிப்புகளை விரைந்து செயல்படுத்துதல் குறித்தும் 19.06.2025 அன்று தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை வேளாண்மை, உழவர்நலத் துறையின் கூட்ட அரங்கில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வி. தட்சிணாமூர்த்தி, சர்க்கரைத்துறை இயக்குநர், வி.அன்பழகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் / சர்க்கரைத் துறை கூடுதல் இயக்குநர் பி.



பாலமுருகன், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் திருமதி. டி.ரமணிதேவி, மாவட்ட வருவாய் அலுவலர், பொது மேலாளர் தமிழ்நாடு சர்க்கரைக்கழகம் திருமதி வி.மாலதி கூட்டுறவு / பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் கரும்பு சாகுபடியை அதிகரிக்கவும்,

சர்க்கரை ஆலைகளின் செயல் திறனை மேம்படுத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக கரும்பு சாகுபடி பரப்பும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனும் அதிகரித்து வருகிறது. கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்காக அரசு தொடர்ந்து பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக 2024 25 அரவை பருவத்திற்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட சிறப்பு ஊக்கத் தொகையான டன் ஒன்றுக்கு ரூபாய் 349/ விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அனைத்து அலுவலர்களையும் அமைச்சர் அவர்கள் வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். மேலும், அமைச்சர் அவர்கள் சிறப்பு ஊக்கத்தொகையை விரைவாக வழங்குவதன் மூலம், கரும்பு சாகுபடி பரப்பு அதிகரித்து, சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் மேம்படும் சூழ்நிலை உருவாகும் எனவும் தெரிவித்தார்.

கரும்பு விவசாயிகள் அதிக மகசூல் பெற்று அதிக வருவாய் பெற்றிடவும், கரும்பு அறுவடைக் கூலியை குறைத்திட அகலப் பார் முறையில் அதிக பரப்பளவில் கரும்பு சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக களப் பணியாளர்கள் விவசாயிகளை நேரில் சந்தித்து உரிய சாகுபடி தொழில்நுட்பங்களை எடுத்துரைக்கவும், கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்திற்கும் அரசாணை பெறப்பட்ட நிலையில், அதனை உரிய நேரத்தில் செயல்படுத்தி, ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்திட சம்மந்தப்பட்ட செயலாட்சியர்கள் / தலைமை நிர்வாகிகள் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனவும், ஆலை பராமரிப்புப் பணிகளை சிறந்த முறையில் மேற்கொண்டு, 202526 அரவைப் பருவத்தை உரிய நேரத்தில் துவங்கி சிறப்பாக அரவைப் பணிகளை முடித்திடவும், நிலுவையில் உள்ள 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணைமின் திட்டத்தை துரிதப்படுத்தி, விரைவில் முடித்திடவும் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக விஞ்ஞானிகள் மற்றும் சர்க்கரைத்துறை அலுவலர்கள், மகாராட்டிரா மாநிலம், பாராமதி பகுதிக்கு சென்று கண்டறிந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கரும்பு மகசூலை அதிகரிக்க பரிசோதனை வயல்கள் அமைப்பது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

மேலும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் கரும்பு இனப் பெருக்க நிறுவனம், கோயம்புத்தூர் ஆகியவற்றுடன் இணைந்து அதிக பிழிதிறன் உள்ள புதிய கரும்பு இரகங்களை அதிக பரப்பளவில் சாகுபடி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அரசு சார்பில் வழங்கும் பல்வேறு மானியங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு உரிய அறிவுரைகள் வழங்கினார்கள். மேலும் ஆலை செயல்பாடுகளை மேம்படுத்தவும் உரிய அறிவுரைகளை வழங்கினார்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தேனி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.ஆஜீப்கான் அறிவிப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், தமிழர் நலன் காத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதன்படி தேனி வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | பழனிசெட்டிபட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் இரா.பாண்டியன் கு.சுருதி |
| 2 | | தேனி வடக்கு ஒன்றியம் | தாடிச்சேரி பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் இரா.பாண்டியன் கு.சுருதி |
| 3 | | வீரபாண்டி பேரூர் | வ.உ.சி. சிலை அருகில் | கம்பம் இரா.பாண்டியன் கு.சுருதி |
| 4 | | தேனி தெற்கு ஒன்றியம் | கோட்டூர் பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் இரா.பாண்டியன் கு.சுருதி |
| 5 | 22.06.2025 | பெரியகுளம் நகரம் | பழைய பேருந்து நிலையம் அருகில் | கம்பம் பி.பாண்டித்துரை கு.சுருதி |
| 6 | | தேனி தெற்கு நகரம் | சமதர்மபுரம் | கம்பம் பி.பாண்டித்துரை கு.சுருதி |
| 7 | | தேனி வடக்கு நகரம் | அல்லிநகரம் பேருந்து நிறுத்தம் அருகில் | கம்பம் பி.பாண்டித்துரை கு.சுருதி |
| 8 | 23.06.2025 | கெங்குவார்பட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | போடி கலைச்செல்வன் கு.சுருதி |
| 9 | | தேவதானப்பட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | போடி கலைச்செல்வன் கு.சுருதி |
| 10 | | வடுகப்பட்டி பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | போடி கலைச்செல்வன் கு.சுருதி |
| 11 | | பெரியகுளம் வடக்கு ஒன்றியம் | அழகர்சாமிபுரம் | போடி கலைச்செல்வன் கு.சுருதி |
| 12 | 24.06.2025 | பெரியகுளம் தெற்கு ஒன்றியம் | ஜெயமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன் கு.சுருதி |
| 13 | | தாமரைகுளம் பேரூர் | வ.உ.சி. சிலை அருகில் | குமரி பிரபாகரன் கு.சுருதி |
| 14 | | தென்கரை பேரூர் | முத்தாலம்மன் கோவில் அருகில் | குமரி பிரபாகரன் கு.சுருதி |
| 15 | 25.06.2025 | மார்கையன் கோட்டை பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன் இ.முத்துச்செல்வம் |
| 16 | | குச்சனூர் பேரூர் | பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன் இ.முத்துச்செல்வம் |
| 17 | | சின்னமனூர் ஒன்றியம் | எர்ணம்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன் இ.முத்துச்செல்வம் |
| 18 | 26.06.2025 | மேலசொக்கநாதபுரம் பேரூர் | வினோபாஜி நகர் பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன் இ.முத்துச்செல்வம் |
| 19 | | போடிநாயக்கனூர் மேற்கு ஒன்றியம் | அணைக்கரைப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன் இ.முத்துச்செல்வம் |
| 20 | | போடி–மீனாட்சிபுரம் | துரைராஜபுரம் பேருந்து நிறுத்தம் அருகில் | குமரி பிரபாகரன் இ.முத்துச்செல்வம் |



தேனி

நாள் : 19-06-2025




தருமபுரி மேற்கு மாவட்டம்,அரூர் சட்டமன்ற தொகுதியில் ஓரணியில் தமிழ்நாடு கழக புதிய உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்குதல் மற்றும் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் கே.மனோகரன் தலைமையில்,அரூர் நகர கழக செயலாளர் முல்லைரவி முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் கழக ஆக்கப் பணிகள் குறித்து விளக்கி பேசினார். உடன் அரூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் சி.செல்லதுரை, மாநில,மாவட்ட நிர்வாகிகள் எஸ்.ராஜேந்திரன், சி.கிருஷ்ணகுமார், ஒன்றிய கழக செயலாளர்கள்,மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் கேசிங்கன் ஊராட்சியில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாமினை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தொடங்கி வைத்து, பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும். பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய செயலாளர் என்.இளையபெருமாள் மற்றும் பலர் உள்ளனர்.